

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 16-09-2024


# ஆணவத்தின் உச்சம் பா.ஜ.க.!

**மதவாதம் - பிளவுவாத சக்தியான பா.ஜ.க.வின் ஆணவத்தின் உச்சம்தான் 'அன்னபூர்ணா' உணவக உரிமையாளரை இழிவுபடுத்திய நிகழ்வு ஆகும். தன்னிடம் வேண்டுகோள் வைத்தார் என்ற ஒரே காரணத்துக்காக - அவரை வரவழைத்து மன்னிப்புக் கேட்க வைத்துள்ளார் 'நீதியற்ற துறை' அமைச்சர் நிர்மலா சீதாராமன். மன்னிப்புக் கேட்கும் காட்சியை பதிவு செய்து, உலகத்துக்கு காட்டி இருக்கிறார் நிர்மலா சீதாராமன். இதன் மூலம் அவமானப்பட்டு நிற்பது அந்த உணவக உரிமையாளர் அல்ல, நிர்மலா சீதாராமன்தான். அதைப் பற்றி எல்லாம் கவலைப்படும் ரகம் அல்ல அவர்.**

கோவை அன்னபூர்ணா உரிமையாளர் சீனிவாசன், ஒன்றிய பா.ஜ.க. அரசின் கொடூர வழிப்பறிக் கொள்கையான ஜி.எஸ்.டி.யை எதிர்க்கவில்லை. ஜி.எஸ்.டி.யை ஏன் போடுகிறீர்கள் என்று கேட்கவில்லை. இது அதிகமான வரியாக இருக்கிறது என்றும் சொல்லவில்லை. அநியாய வரியாக இருக்கிறது என்றும் சொல்லவில்லை. ஜி.எஸ்.டி.யை மொத்தமாக எடுத்து விடுங்கள் என்றும் சொல்லவில்லை. இந்த வரி முறையால் எங்களால் தொழில் செய்ய முடியவில்லை என்றும் சொல்லவில்லை. இதனால் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்றும் அவர் சொல்லவில்லை. பா.ஜ.க.வை விமர்சிக்கவில்லை. நிர்மலா சீதாராமனை விமர்சிக்கவில்லை.

அவர் சொன்னது, 'எவ்வளவு வரி வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் எல்லாப் பொருளுக்கும் ஒரே மாதிரி வரியாக போடுங்கள் மேடம்' என்றுதான் அன்னபூர்ணா உரிமையாளர் சொன்னார். இதுவே அநியாயமான கருத்துத்தான். அது இருக்கட்டும்.

"எங்களுக்கு ஒரே ஒரு பிரச்சினைதான் இருக்கிறது. வருகிற மக்கள் சண்டை போடுகிறார்கள். உங்களுக்கு பக்கத்தில் இருக்கும் எம்.எல்.ஏ.வான வானதி சீனிவாசனும் சண்டை போடுகிறார். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விதமான ஜி.எஸ்.டி. இருக்கிறது. பன்னுக்கு ஜி.எஸ்.டி. கிடையாது. பன்னுக்குள் இருக்கிற கிரீம்க்கு 18 விழுக்காடு ஜி.எஸ்.டி. இருக்கிறது. வாடிக்கையாளர் என்ன சொல்கிறார்கள் என்றால், பன்னையும் கிரீமையும் தனித்தனியாக கொடுங்க. நாங்களே உள்ளே வைத்து சாப்பிட்டுக் கொள்கிறோம் என்கிறார்கள். எங்களால் கடை நடத்த முடியவில்லை. அதனால் எல்லாத்துக்கும் ஜாஸ்தி பண்ணிடுங்க. இனிப்புக்கு 5 சதவிகித வரி, காரத்துக்கு 12 சதவிகித வரி போடுறீங்க. இதை வானதி சீனிவாசனிடம் கேட்டா, 'வடநாட்டுல இனிப்பு அதிகம் சாப்பிடுறாங்க, அதுனால குறைவு' என்று சொல்கிறார். தமிழ்நாட்டுல ஸ்வீட், காரம், காப்பி இப்படித்தான் சாப்பிடுவோம்" என்று சொல்லி இருக்கிறார் அன்னபூர்ணா உரிமையாளர்.

**"மாநில வாரியாக வரிப் போடுவது இல்லை" என்று அமைச்சர் நிர்மலா சீதாராமன் சொன்னதும், "இந்தியா முழுவதும் ஒரே வரியா ஜி.எஸ்.டி.யை ஏற்றிவிட்டாலும் பரவாயில்லை. ஒரே மாதிரி வரி போடுங்க. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியா வரி போடாதீங்க. ஏனென்றால், பில் போடுவதற்கு கம்யூட்டரே திணறுகிறது" என்று சொல்கிறார் உணவக உரிமையாளர்.**

அதிகப்படியாக வரிப் போடுகிறீர்கள் என்று அவர் சொல்லவில்லை. 'அதிகப்படியாக எவ்வளவு வரி வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். ஒரே மாதிரி போடுங்கள்' என்றுதான் சொல்கிறார். இதைக் கூட அமைச்சர் நிர்மலாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சிறு ஆலோசனையைக் கூட அந்த ஆணவக் கூட்டத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**தன்னை வந்து சந்தித்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அமைச்சர் நிர்மலா சீதாராமன் நினைத்ததும், மன்னிப்புக் கேட்கும் காட்சியை வீடியோவாக எடுத்து பொதுவெளியில் பரப்பியதும், ஆணவக்கூட்டத்தின் அக்கிரமங்களுக்கு அநியாய சாட்சியங்களாக வரலாற்றில் பதிவாகி இருக்கிறது.**

நிர்மலா சீதாராமனைப் பற்றித் தெரிந்தவர்களுக்கு இது அதிர்ச்சியான காட்சிகள் அல்ல. பெங்களூரில் ஒரு மாணவர் கேள்வி கேட்டார். 'சிங்கப்பூரில் இப்படி எல்லாம் கேள்வி கேட்க முடியாது' என்று சொன்னவர் இவர்தான்.

**ஜி.எஸ்.டி.யால் என்னென்ன பொருள்கள் எவ்வளவு விலை உயர்கிறது என்று தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொன்னபோது, 'இறுதிச் சடங்கு நடத்துவதற்கு ஜி.எஸ்.டி. வரி விலக்கு' என்று பதில் அளித்தவர்தான் இந்த நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். 'இந்தியாவில் இறுதிச் சடங்கு, உடல் அடக்கம், உடல் தகனம் போன்ற சவக்கிடங்கு சேவைகளுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிக்கப்படவில்லை. முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது" என்று நாடாளுமன்றத்தில் 2022 ஆம் ஆண்டு சொன்னவர்தான் அவர். அவரிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?**

கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி பேசும் போது குறுக்கிட்ட நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், 'உங்க தமிழ்நாடு' என்றுதான் பதில் சொல்லத் தொடங்கினார். இவரைத்தான் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக கேபினெட் அமைச்சர் ஆக்கி இருப்பதாக பா.ஜ.க. சொல்லிக் கொள்கிறது. அவரே தன்னை தமிழ்நாடு என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுபவர்.

ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு எந்த நிதியும் இல்லை. இதைப் பற்றி கேட்டபோது, "மாநிலங்களுக்கு 1.50 லட்சம் கோடியை வட்டியில்லாத கடனாக தந்திருக்கிறோமே, இது போதாதா?" என்று கேட்டவர் தான் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். 'சம்பளம் கேட்டா, கடனா வாங்கிக்க' என்று சொல்வதைப் போன்ற கொடூரமல்லவா இது? இப்படிப்பட்டவர்,

**ஒரு காட்சியை நினைவூட்டிப் பாருங்கள். உயர் பதவியில் இருந்த ஒரு பெண் வி.வி.ஐ.பி.யை, ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, பொதுமேடையிலேயே கையை உயர்த்தி கண்டித்தார் அல்லவா? நிர்மலா சீதாராமனை அந்த வி.வி.ஐ.பி. கிண்டலடித்தார் என்பதற்காகத்தான் அது நடந்ததாக பா.ஜ.க.வினரே பேசிக் கொள்கிறார்கள். எத்தகையவர்களிடம் மக்கள் சிக்கிக் கொண்டுள்ளார்கள் என்பதற்கு இவை எல்லாம் உதாரணங்கள்.**

●●



தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2024) பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அண்ணா அறிவாலய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை அமைச்சரும், கழகப் பொதுச்செயலாளருமான துரைமுருகன், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழுத் தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### தூத்துக்குடி மாவட்டம் – எட்டயபுரத்தில்

# மகாகவி பாரதி பிறந்த இல்லம் - கரிசல்காட்டு எழுத்தாளர் கி.ராஜநாராயணன் நினைவு இல்லம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

சென்னை, செப். 16 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 12.09.2024 அன்று தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் பிறந்த இல்லத்திலுள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆய்வு செய்து, மகாகவி பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் வைக்கப்பட்டுள்ள வரலாற்று புகைப்படங்கள் மற்றும் மகாகவி பாரதியார் பயன்படுத்திய பொருட்களைப் பார்வையிட்டார்கள். மேலும், மகாகவி பாரதியார் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர்கள் பதிவேட்டில் தனது குறிப்புகளைப் பதிவு செய்தார்.

அதனைத்தொடர்ந்து, கோவில்பட்டியில் அமைந்துள்ள கரிசல்காட்டு இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் நினைவரங்கத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், மின்னணு நூலகத்தில் அன்னாரது படைப்புகள் மற்றும் படங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, வரலாற்றுப் புகைப்படங்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களைப் பார்வையிட்டார். நினைவரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர்கள் பதிவேட்டில் தனது குறிப்புகளைப் பதிவு செய்தார்கள்.

பின்னர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் விடுதலைப் போர் தியாகிகளுக்கும், மொழிப் போர் தியாகி களுக்கும், தியாகத் திருமக்களுக்கும் எழிலொழுகும் வடிவங்களில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலமாக பராமரிக்கப்படுகின்றன.

அதாவது நம் நாட்டு விடுதலைக்கு வித்திட்ட வீரத் தியாகிகள், தமிழ்நாட்டின் மிகச்சிறந்த ஆளுமைகள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுப் பெருமையினைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூக நீதி கருத்துக்களை விரைந்து வளர்த்த தலைவர்கள், கவிஞர்கள், இசை மேதைகள், இந்திய விடுதலைப்போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டின் தியாகத் தலைவர்கள் முதலானோரின் நினைவுகளைப் போற்றி பெருமைப்படுத்திடும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத்தூண்கள், நினைவுச்சின்னங்கள், நினைவு வளைவுகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் சிறப்புகளையும், பெருமைகளையும் மாணவ - மாணவியர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என அனைவரும் அறிந்து பயனடையும் வகையில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் தூத்துக்குடி மாவட்டத்தில் எட்டயபுரத்திலுள்ள மகாகவி பாரதியார் பிறந்த இல்லம் மற்றும் கோவில்பட்டியிலுள்ள கரிசல்காட்டு இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் நினைவரங்கத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கோவில்பட்டி அருகே உள்ள இடைச்செவல் கிராமத்தில் பிறந்து அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தவர். சமூகத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டவராக, நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை உருவாக்கி சிறந்த சமூகவாதியாக ஒரு அற்புதமான மனிதராக வாழ்ந்து மறைந்த கரிசல்காட்டு இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களுடைய பெருமையைப் போற்றுகின்ற வகையில் கோவில்பட்டியில் திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவரங்கம் அமைக்கப்பட்டு இன்றைக்கு இங்கு இருக்கக் கூடிய மக்கள் மற்றும் வெளியில் இருந்து வரக்கூடிய பார்வையாளர்கள் எல்லோரும் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு குறித்து தெரிந்துகொள்கின்ற வகையில் அவர்கள் படைத்த சில நூல்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுபோன்ற சுதந்திரப் போராட்ட தியாகிகளாக இருந்தாலும் சரி, தமிழ்மொழியின் மீது மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருந்தாலும் சரி அவர்களின் நினைவுகளைப் போற்றுகின்ற வகையில் அவர்களுக்கெல்லாம் திருவுருவச்சிலைகளும், நினைவகங்களும்; அமைத்து பெருமைப்படுத்தும் அரசு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

பேரறிஞர் அண்ணா அவர்களின் காலங்களிலும் சரி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் காலங்களிலும் சரி அவர்களுடைய வழியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு இது போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்கள்.

இந்த ஆய்வின்போது, கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. மகாலட்சுமி, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் உடனிருந்தனர்.

# பரமத்திவேலூர் தொகுதி புதிய கட்டிட அலுவலகம் - கலைஞர் அரங்கம் திறப்பு விழா!

நாமக்கல், செப். 16 -

காலை 10.00 மணியளவில் கழக பவள விழா ஆண்டை முன்னிட்டு வேலூரில் 60 அடி நினைவு கொடிக்கம்பத்தில் கழக இருவண்ணக்கொடியை கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

மேலும், காலை 10.30 மணிக்கு பரமத்திவேலூர் தொகுதி புதிய கட்டிட அலுவலகம் கலைஞர் அரங்கம், இ சேவை மையம், கலைஞர் படிப்பகம் மற்றும் புதிய பொது உறுப்பினருக்கான அட்டை வழங்கும் விழா மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினர்.

கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா , மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் மற்றும் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் ஜே.ரேகா பிரியதர்ஷினி, மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் திருமதி.ரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பரமத்தி ஒன்றிய கழக செயலாளர் திரு.பி.பி.தனராசு, வேலூர் பேரூர் கழக செயலாளர் பி.முருகன் வரவேற்புரை மற்றும் நன்றியுரையாற்றினர்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட துணை செயலாளர் வி.ஜி.அன்பழகன், திருமதி.எம்.சாந்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ரங்கசாமி, பொதுக்குழு உறுப்பினர் பி.பி.சாமிநாதன், பி.சிவக்குமார், எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.தங்கவேல், கபிலர்மலை ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சண்முகம், மோகனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.பி.ஆர்.சண்முகம், பொத்தனூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.கருணாநிதி, பரமத்தி பேரூர் கழக செயலாளர் மு.ரமேஷ்பாபு, வெங்கரை பேரூர் கழக செயலாளர் எம்.ராமலிங்கம், பாண்டமங்கலம் பேரூர் கழக செயலாளர் பி.முருகவேல், திருச்செங்கோடு மற்றும் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பேரூராட்சி தலைவர்கள் சோமசேகர், மணி, திருமதி.லட்சுமி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முன்னாள் அமைச்சர் பெரியவர் மன்னை நாராயணசாமி அவர்களின் கொள்ளு பேரனும், மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும் மன்னை நகர மன்றத் தலைவருமான மன்னை த .சோழராஜனின் மகனுமாகிய சோழ. அருண் மொழிவர்மன் university college of London (UCL) ல் சட்டம் (LLM )மேற்படிப்பு படிப்பதற்காக லண்டன் (London) செல்லும் முன் கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.